3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதாவிற்கு பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–2011 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய 174 முதல் 180 வரையிலான 7 அறிக்கைகளை குழுத் தலைவர் அவர்களின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–2011 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டப் பேரவை மனுக்கள் குழுவின் 116 முதல் 119 வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.